மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 4—20

(இ) சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018 ஆம் ஆண்டு சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2018), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 5–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் பல்கலைக்கழகம் அமைக்க அனுமதி கொடுப்பதை நான் அடிப்படையிலேயே, கொள்கை ரீதியாகவே எதிர்க்கிறேன். குறிப்பாக, தனியார் பல்கலைக்கழகம் என்பது தன்னிச்சையாக செயல்படும். இங்கு கொடுக்கப்பட்டுள்ள இந்தச் சட்டமுன்வடிவில் எந்தவிதமான அரசு கட்டுப்பாடுகளும் இருப்பதாகத் தெரியவில்லை. முழுக்க முழுக்க சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. அண்ணாமலை பல்கலைக்கழகம் ஒரு* private university *ஆக இருந்தது. ஒருகாலத்தில் சென்னை பல்கலைக்கழகமும், அண்ணாமலை பல்கலைக்கழகமும்தான் இருந்தன. அண்ணாமலை பல்கலைக்கழகம் தனியார் பல்கலைக்கழகமாக இருந்தபோதும்கூட,* Governor*தான் அதனுடைய* Chancellor *ஆக இருந்தார்.* Pro–Chancellor *ஆகத்தான் திரு. முத்தையா செட்டியார் இருந்தார். அதுதான் வழக்கம், அப்படித்தான் இருந்தது. ஆனால், இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் சட்டமுன்வடிவில்,* Chancellor *நியமனம் குறித்து,* 'The Chancellor shall be appointed by the management committee of the Trust for a period of three years, as may be prescribed' *எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், அங்கு* Chancellor–*ஐ நியமிக்கும் அதிகாரம்* Governor–*க்கும் இல்லாமல், இந்த அரசுக்கும் இல்லாமல் ஒரு பல்கலைக்கழகத்தை முழுமையாக தனியார் வசம் கொடுத்தார்களேயானால், எந்தக் கட்டுப்பாடுமே இல்லாமல்தான் அது இயங்குமே தவிர, வேறு எப்படி இயங்கும் என்பதைத் தயவுசெய்து நினைத்துப் பார்க்க வேண்டும். எனக்கு, உங்களுக்கு என்றில்லாமல் அனைவரையுமே பாதிக்கக்கூடிய ஒரு விஷயம்தான் இது. இப்பல்கலைக்கழகத்தில் அரசினுடைய கட்டுப்பாடே இல்லை. கல்லூரிகளுக்கு இருக்கும் கட்டுப்பாடுகூட இல்லை. தனியார் கல்லூரிகள் இருக்கின்றன என்றால், அவை பல்கலைக்கழகங்களுக்கு உட்பட்டவை. ஒரு கல்லூரி, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தோடோ, சென்னைப் பல்கலைக்கழகத்தோடோ இணைக்கப்பட்டிருந்தால், அது அப்பல்கலைக்கழகத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. ஆனால், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகம் என்பது முழுக்க முழுக்க தனியாருக்கு விற்கப்பட்டது மாதிரி ஆகிறதே தவிர, அவர்கள் செய்கின்ற எதையும் நாம் கட்டுப்படுத்துகிற ஒரு வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது. இதனால், கல்வியின் தரம் குறையும். எவ்வளவு*

வேண்டுமானாலும் பணம் collect செய்வார்கள், அரசாங்கம் அதில் தலையிடுவதற்கே வாய்ப்பில்லை. தற்போது எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் Chancellor ஆக Governor இருக்கிறார். ஆனால், குறைந்தபட்சம் அதுபோல்கூட இல்லாமல், இந்தத் தனியார் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதன் நோக்கம் என்ன என்பதை நாம் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இதற்காக யாரையும் குற்றம் சொல்லவில்லை. மத்திய அரசாங்கம், பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்ன காரணத்தினால், அதிகரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் அப்படி அதிகரிக்க வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், அதாவது, deemed universities உருவாக்கப்பட்டன. அந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களைக்கூட கட்டுப்படுத்த வேண்டுமென்று இந்த அரசுதான் சட்டம் கொண்டு வந்தது. மாணவர்களின் சேர்க்கை 700 பேர் என்பதற்குப் பதிலாக, 1,000 பேர் என எவ்வளவு பேரை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம், அவர்களே தேர்வு நடத்திக்கொள்ளலாம், எப்படி வேண்டுமானாலும் resultவெளியிடலாம்; அப்படியெல்லாம் அவை உருவாக்கப்பட்டதன் விளைவுதான் இன்று பல்வேறு தனியார் கல்லூரிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களே அதை விரும்பவில்லை. நிகர்நிலைப் பல்கலைக்கழகமாவது பரவாயில்லை; அதையும் விட்டுவிட்டு, ஒரு பல்கலைக்கழகத்தை முழுக்க முழுக்க தனியார்வசம் ஒப்படைப்பது என்பது தவறான ஒன்று. ஆகவே, தயவுசெய்து இதற்காக ஒரு கமிட்டி அமைத்துப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 முதல் 2011 வரையிலான அவர்களது ஆட்சிக் காலத்தில் தனியார் பல்கலைக்கழகம் கொண்டுவர வேண்டுமென்ற சூழ்நிலையிலே, கோவையிலுள்ள PSG பொறியியல் கல்லூரியையும், மதுரையிலுள்ள தியாகராஜர் பொறியியல் கல்லூரியையும், அதாவது, aided கல்லூரிகளாக இருந்த அரசு உதவிபெறும் கல்லூரிகளை தனியார் பல்கலைக்கழகங்களாக உருவாக்க வேண்டுமென்று அந்த காலகட்டத்தில் கொண்டு வரப்பட்ட முயற்சி எங்களால் தவிர்க்கப்பட்டது. அதற்குக் காரணம்,

2018 ஜூலை 5] [திரு. கே.பி. அன்பழகன்]

தனியார் பல்கலைக்கழகமானது இன்றைக்கு அரசு உதவிபெறும் கல்லூரிகள் மூலமாகப் பல்வேறு நன்மைகளையடைந்து, அதன் மூலமான வளர்ச்சியை அந்த நிறுவனத்திற்கு அப்படியே கொண்டு போகிற நிலையை அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தார்கள். அன்றைய தினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்து தவிர்த்தோம். ஆனால், இந்தக் காலகட்டத்தில் பார்க்கின்றபோது, நாட்டிலுள்ள பெரிய மாநிலங்களான மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், குஜராத், கர்நாடகம், ராஜஸ்தான், மேற்கு வங்காளம், ஒடிசா, பீகார், அரியானா, இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட், சத்தீஸ்கர், அஸ்ஸாம் மற்றும் பிற மாநிலங்களில் தனியார் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன.

பிற்பகல் 4—25

இன்றைய தேதியில் பெரிய மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களே இல்லை. எனவே, தமிழ்நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், நாட்டிலுள்ள 24 மாநிலங்களில் 288 தனியார் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாறு தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்குவதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு அதிக வாய்ப்புகளைப் பெறுவார்கள். அதேநேரத்தில் இப்பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தரமான கல்வி பெறுவதற்கும் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கும், மேலும் மாணவர்கள் அவர்களது கல்வித் தகுதியினை உயர்த்திக்கொள்வதற்கும் வழிவகை ஏற்படும். இதன் அடிப்படையில்தான் தமிழ்நாட்டில் சிவ்நாடார் தனியார் பல்கலைக்கழகம் இன்றைக்கு தொடங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்குவதற்கு பல்கலைக்கழக மானியக் குழு விதிகளின்படி, மாநில அரசால் உரிய சட்டம் இயற்றப்பட வேண்டும். அதேநேரத்தில், 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னிலையில் தமிழ்நாட்டில் தனியார் பல்கலைக்கழகம்

தொடங்குவது தொடர்பாக தமிழ்நாடு அரசுக்கும் மற்றும் H.C.L. Corporation Private Limited–க்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. சிவ்நாடார் பல்கலைக்கழகமானது 250 கோடி ரூபாயில் தமிழகத்திலே மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்காக, தனியார் பல்கலைக்கழகம் தொடங்குவதற்காக அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் உயர் கல்வி தொடர்பான முதலீட்டினை வரவேற்பது மிக அவசியமாகிறது.

அதேநேரத்தில் இன்றைக்கு தனியார் பல்கலைக்கழகம் குறைந்தபட்சம் 100 ஏக்கர் பரப்பளவிலே தொடங்கப்பட வேண்டும். மற்ற மாநில தனியார் பல்கலைக்கழகங்களோடு ஒப்பிடுகையில் இதன் நிலப்பரப்பானது அதிகபட்சமாக இருக்கக்கூடிய 50 ஏக்கர் பரப்பளவைவிட இரண்டு மடங்காக, 100 ஏக்கர் என்ற அளவில் இருக்கிறது.

இப்பல்கலைக்கழகங்கள் ரூ.50 கோடி அளவில் அறக்கட்டளை நிதியை ஏற்படுத்த வேண்டும். இத்தொகைக்கு மேற்பட்ட தொகையினை பல்கலைக்கழக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளலாம். சார்ந்த அறக்கட்டளை நிறுவனங்களுக்காக இயற்றப்படவுள்ள சட்டத்தில் உள்ள கூறுகளை நிறைவேற்றியுள்ளதாக உறுதி ஆவணம் அளித்த பின்பு, அதன்மீது அரசானது தனது இசைவினைத் தெரிவித்த பின்பே புதிய பல்கலைக்கழகங்களைத் தொடங்க வேண்டும்.

இப்பல்கலைக்கழகங்களில் செயலாட்சி மன்றத்தில், உயர் கல்வித் துறைச் செயலர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாகச் செயல்படுவார்கள். அஸ்ஸாம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் செயல்படும் பல்கலைக்கழகங்களில் அதிகார அமைப்புகளிலே அரசின் பிரதிநிதிகள் எவரும் இடம்பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேவேளையில் இப்பல்கலைக்கழகங்களில் நடத்தப்படும் ஒவ்வொரு பாடப் பிரிவுகளுக்கான ஒப்புதல் அளிக்கப்பட்ட மாணவர் சேர்க்கை இடங்களில் 35 சதவிகித இடங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். இவ்வொதுக்கீட்டில் மாநில அரசின் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட வேண்டும். தகுதித் தேர்வுக்கு முன்பாக இத்தகைய மாணவர்களின்

பெற்றோர்கள் தமிழ்நாட்டில் 5 வருடங்கள் வசித்திருக்க வேண்டும் அல்லது மாணவர்கள் தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களில் 5 வருடங்களுக்குக் குறையாமல் கல்வி பயின்றிருக்க வேண்டும் என்பன போன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்துகொள்கிறேன். இதுபோன்று 24 மாநிலங்களிலும் தனியார் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஆனால், இதுபோன்ற தனியார் பல்கலைக்கழகங்களில் இந்த அளவிற்கு இட ஒதுக்கீட்டை யாரும் பெறவில்லை என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். இட ஒதுக்கீட்டைப் பெறுகின்றபட்சத்திலே நம் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் இந்தத் தனியார் பல்கலைக்கழகத்தில் பயிலக்கூடிய வாய்ப்பும் இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் இன்றைக்கு 250 கோடி ரூபாய் முதலீடாகச் செய்யப்பட்டு, இங்கே தனியாக ஒரு தனியார் பல்கலைக்கழகம் உருவாகின்றபட்சத்திலே ஆராய்ச்சிப் படிப்புகளைப் படிக்கின்ற மாணவர்களுடைய வளர்ச்சியும் பெருமளவிலே இருக்கிறது என்பதை இங்கே கோடிட்டுக் காட்டி, இந்தத் தனியார் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, இதில் clarification எல்லாம் ஒன்றுமில்லை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 51 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 51 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக

இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.